கவன ஈர்ப்புகள்

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மின் நிலையம் தொடங்க இருப்பதாக அறிவித்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும், நிலச் சொந்தக்காரர்கள் ஒப்புதல் அளித்தும், துவங்கப்படாமல் இருக்கிறது. ஆனால், இதற்குப் பிறகு தொடங்கப்பட்ட பல திட்டங்கள் முடியும் தருவாயில் இருக்கின்றன. அப்படிப்பட்ட தாமதத்தின் காரணமாகவும் அந்தப் பகுதியில், அதிக அளவு விவசாய மோட்டார்கள் பயன்படுத்துவதாலும், வோல்டேஜ் பிராபிளம் ஏற்பட்டு, அடிக்கடி மோட்டார்கள் எரிந்து, பழுதடைந்து விடுகின்றன. அவற்றைப் போக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுமா? உடனடியாக, மின் நிலையப் பணியைத் துவங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தியிருப்பது உண்மையாக இருக்குமானால், விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாற்று ஏற்பாடுகளின் மூலம் நிவாரணம் எளிதல்ல.

(16) உசிலம்பட்டி தாலுகா, தொட்டப்பநாயக்கனூர் கிராமத்தில் கூடுதல் மின்மாற்றி நிறுவுதல்

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, தொட்டப்பநாயக்கனூர் கிராமத்தில் அப்பகுதி மின்சார இணைப்பு நிலை கருதி புதிதாக நிறுவ திட்டமிட்ட டிரான்ஸ்பார்மர் நிறுவும் பணி கடந்த மூன்றாண்டு காலமாக நடைபெறாமலுள்ளதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுக்கா தொட்டப்ப நாயக்கனூர் மின் விநியோகப் பகுதிகளில் ஐந்து மின் மாற்றிகள் விநியோகம் செய்கின்றன. மேலும் இந்தப் பகுதியில் மின்சார விநியோக நிலையில் சீர்திருத்தம் செய்ய ஒரு புதிய கூடுதல் மின் மாற்றி விரைவில் நிறுவப்பட உள்ளது. இந்த வேலை கடந்த மூன்றாண்டு காலமாக நடைபெறாமல் உள்ளது என்ற கூற்று தவறு.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுகாலமாக நடைபெறாமல் உள்ளது என்ற கூற்று தவறு என்று சொல்லியிருக்கிறார்கள். வேண்டுமென்றால், அரசுக்கு அது தெரியப்படுத்தப்படாமல்

கவன ஈர்ப்புகள்

(திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்)

இருக்கலாம். அது பெரிய துணை மின் நிலையம் ஏற்படுத்துகின்ற திட்டம் அல்ல; சிறிய டிரான்ஸ்பார்மர் ஏற்படுத்துகின்ற திட்டம். எனவே, அது மிக அவசியமாக இருக்கிற காரணத்தாலே, கடந்த 3 ஆண்டுகாலமாக அந்தப் பிரச்னை அங்கே இருக்கிறது. அது விரைவில் மேற்கொள்ளப்படுமா என்று அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விரைவில் தீர்க்கப்படும். 3 ஆண்டுகள் என்று குறிப்பிட்டதுதான் தவறு என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு வேளை 4 ஆண்டுகளாக இருக்கலாம்.

(17) வேலூர் சர்க்கரை ஆலையில் கரும்பு அரைப்பதில் ஏற்படும் தாமதம் குறித்து.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வேலூர் சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை ஆலையைப் பயன்படுத்துவோர் கரும்பு அரைக்க சுமார் 15 முதல் 16 மாதங்கள் ஆவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவைக்காக பதிவு செய்யப்பட்ட 9933 ஏக்கரில் 15–4–1986 முடிய 6,393 ஏக்கர் அறுவடை செய்யப்பட்டு அந்த ஆலையிலேயே அரவை செய்யப்பட்டது. மீதமுள்ள 3,540 ஏக்கர் கரும்பும், ஜுன் 1986 இறுதிக்குள் அறுவடை செய்யப்பட்டு அவ்வாலையில் அரவை செய்யப்பட்டுவிடும். இந்த 3,540 ஏக்கர் கரும்பில் 340 ஏக்கர் கரும்பு கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலும், 1,568 ஏக்கர் கரும்பு ஏப்ரல் மாதத்திலும் நடவு செய்யப்பட்டதாகும். ஆகவே வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை செய்ய 15 அல்லது 16 மாதங்கள் சாதாரணமாக ஆகிறது என்ற கூற்று சரி என்று சொல்வதற்கில்லை. கடந்த ஆண்டு ஆலையின் தேவைக்கதிகமாக கரும்பு சாகுபடி செய்ததன் விளைவாக, மேற்படி கரும்பை வெட்டுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அந்தந்த மாதத் தேவைக் கேற்ப கரும்பை சாகுபடி செய்யாததாலும், தேவைக்கதிகமாக சாகுபடி செய்ததாலும், வெட்டு உத்திரவை சரியான காலத்தில் கொடுக்க முடியவில்லை. மேலும்